மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் சுமார் 2.79 கோடி தொழிலாளர்கள் உள்ளனர். தமிழகம், தொழில் அமைதி காக்கும் தொழிலாளர்களைக் கொண்ட மாநிலம் என்ற நிலையை கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இழந்துவிட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி, தொழில் அமைதியைப் பேணிக் காப்பதில் தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

அண்மையில்கூட, இந்தியத் தொழில் கூட்டமைப்பு (CII) மற்றும் இந்தியத் தொழில் வர்த்தகக் கூட்டமைப்பு FICCI-இன் கூட்டங்களில் மாண்புமிகு அம்மா அவர்கள் கலந்து கொண்டு தமிழகத்திற்கு அதிகப்படியான வெளிநாட்டுத் தொழில் முதலீடுகளை அளித்து தொழில் வளம் பெருக வேண்டுமென்றும், அதற்கெனப் புதிய தொழில் கொள்கை விரைவில் அறிவிக்கப்படும் என்றும் கூறினார்கள். இதனால் தொழிற்சாலைகள் பெருகி, வேலைவாய்ப்புகள் உருவாகும் வாய்ப்பினை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்புகள் குறித்த தொழில் தாவாக்களை உடனுக்குடன் தீர்த்திடும் வகையில் தொழிலாளர் நலத் துறை செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாகக் கடந்த காலங்களில் அதிக எண்ணிக்கையிலிருந்த வேலைநிறுத்தம் மற்றும் கதவடைப்புகள் குறித்த தாவாக்கள் தற்போது தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, கன்னியாகுமரி மாவட்டம், அரசு இரப்பர் கழக நிருவாகத்திற்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையே ஊதிய உயர்வு மற்றும் இதர கோரிக்கைகள் தொடர்பாக இரப்பர் பால் வடிப்புத் தொழிலாளர்களுக்கு தினசரி கூலியாக ரூ.250/- வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை மைனாரிட்டி தி.மு.க. அரசு கண்டுகொள்ளாததால் 1-4-2011 முதல் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர். ஆனால், இப்பிரச்சினை குறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றதும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என்ற முறையில் நானும், மரியாதைக்குரிய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் நேரடி நடவடிக்கைகள்